முதலாவது தேர்ச்சி : இறைத்திட்டத்தை விளங்கி அதற்கேற்ப தமது வாழ்வை அமைத்துக் கொள்வர்

7

## 1.7. இலங்கைத் தீவிற்கு நற்செய்தி ஒளி



**நெஸ்தோரியன் சிலுவை**

**போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருமுன் இலங்கையில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள்:**

1. பேராசிரியர் பறனவித்தானவின் கூற்றுப்படி

- முதலாவது காசியப்பன் (கி.பி. 473 - 491) முதலாவது முகலன் (கி.பி. 491-506) அரசர்களின் காலத்தில் கிறிஸ்தவப் பிரபுக்கள் இருந்தார்கள்.
- காசியப்பன் அரசன் காலத்தில் அநுராதபுரத்தில் மிகார எனும் படைத் தளபதியினால் கிறிஸ்தவ ஆலயம் நிர்மாணிக்கப்பட்டது.

2. கொஸ்மஸ் இன்டிக்கோ பிளாஸ்தர் என்ற கிரேக்க வணிகன் கி.பி. 535ல் எழுதிய தமது ‘‘கிறிஸ்தவ சபைகளின் விவரணம்’’ என்ற நூலில் 6ம் நூற்றாண்டில் பாரசீக கிறிஸ்தவ சமூகத்தைக் கண்டதாகவும், கிறிஸ்தவ ஆலயம் இருந்ததாகவும், பாரசீகத்திலிருந்து வந்த குரு பணியாற்றியதாகவும், மத வழிபாட்டுக்கு உரிய பொருட்கள் இருந்ததாகவும் குறிப்பிடுகின்றார்.

1912ம் ஆண்டு அநுராதபுர அகழ்வு ஆராய்ச்சியில், கண்டெடுக்கப்பட்டு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள நெஸ்தோரியன் கற்சிலுவை கி.பி. 500ஆம் ஆண்டுகளைச் சார்ந்ததாகும். இது பாரசீக கிறிஸ்தவ வணிக குழாம் ஒன்று இப்பகுதியில் வாழ்ந்துள்ளது என்பதை உறுதி செய்கிறது.

## போர்த்துக்கேயரின் வருகை

1505ம் ஆண்டு கார்த்திகை 15ம் திகதி போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தனர். அவர்கள் வர்த்தக நோக்கத்தில் வந்திருந்தாலும் தமது கத்தோலிக்க மதத்தையும் இலங்கையில் போதித்தனர். அதைத் தொடர்ந்து இலங்கையில் கத்தோலிக்க மதம் வளரலாயிற்று.

♦ கோட்டை அரசன் 7ம் புவனேகபாகு போர்த்துக்கேயருடன் செய்த ஒப்பந்தம் இரண்டு விடயங்களை உள்ளடக்கியிருந்தது.

1. தமது பேரன் தர்மபாலவுக்கும் தமக்குப் பின் பாதுகாப்பு வழங்கி கோட்டை இராச்சியத்தை அளித்தல்.
2. கத்தோலிக்க மதத்தைப் போதிப்பதற்காக மறைப் பணியாளர்களை இலங்கைக்கு வரவழைத்தல்.

இவ் ஒப்பந்தத்தின் அடிப்படையில் போர்த்துக்கேயர் காலத்தில் பணியாற்ற மறைப்பணியாளர்கள் இலங்கைக்கு வந்தார்கள்

1. பிரான்சிஸ்கன் சபை குருக்கள் (1543)
2. இயேசு சபைக் குருக்கள் (1602)
3. டொமினிக்கன் சபை குருக்கள் (1605)
4. அகுஸ்தீனியன் சபை குருக்கள் (1605)

இவ்வாறு இலங்கைக்கு வந்த பிரான்சிஸ்கன் சபைக் குருக்கள் தமது மறைதூதுப் பணியை சுதந்திரமாக ஆற்றுவதற்கு அனுமதியைப் பெற்றார்கள்.

## மன்னார் மறை சாட்சிகள்

இந்நாட்களில் இலங்கையின் வடமேல் மன்னார் கரையோரத்தில் கத்தோலிக்க விசுவாசம் ஆழ வேரூன்றியிருந்தது. தனது அரசில் கத்தோலிக்கம் வளர்வதை விரும்பாத யாழ்ப்பாண அரசன் சங்கிலியன் கத்தோலிக்கரை அழித்துவிட முயன்றான். தம் மதத்தைக் கைவிட மறுத்த அறுநூறுக்கும் மேற்பட்ட கத்தோலிக்கரை மன்னார் தோட்டவெளிப் பிரதேசத்தில் வாளுக்கு இரையாக்கினான். விசுவாசிகளின் இரத்தம் திருச்சபையின் வித்தாகியது.

## ஒல்லாந்தர் காலம் (1658 - 1796)

ஒல்லாந்தர் ஆட்சியில் கத்தோலிக்க மதம்

- தடை செய்யப்பட்டது.
- வழிபாடுகள் தடைசெய்யப்பட்டன.
- பாடசாலைகள் பறிமுதல் செய்யப்பட்டன.
- ஆலயங்கள் உடைக்கப்பட்டன.
- திருச்சுரூபங்கள் அழிக்கப்பட்டன.
- கத்தோலிக்கர் புறக்கணிக்கப்பட்டு, ஓரங்கட்டப்பட்டனர்.
- கத்தோலிக்க குருக்களுக்கு அடைக்கலம் கொடுத்து உதவியவர்களுக்கு தண்டனைகள் வழங்கப்பட்டன.
- கத்தோலிக்க குருக்களும், மறைபரப்பாளர்களும் நாட்டிலிருந்து விரட்டப்பட்டனர். எனவே கத்தோலிக்க மதம் தன் பொலிவை இழந்தது.

1687ல் ஆண்டவர் அனுப்பிய அப்போஸ்தலராக இலங்கைக்கு வந்தார் ஜோசப்வாஸ் அடிகள். இந்திய கோவா நகரிலிருந்து இலங்கையில் இன்னலுறும் கத்தோலிக்க விசுவாசிகளுக்கு பணி செய்ய தம் முழு வாழ்வையும் அர்ப்பணித்து உழைத்தார். சிறிது காலம் யாழ்ப்பாணத்திலும், பின் கண்டியிலும் சிறப்பாகப் பணி செய்து கத்தோலிக்க மதத்தை வளர்த்தார்.



இலங்கையின் அப்போஸ்தலரான
முத்திப்பேறு பெற்ற
ஜோசப் வாஸ் அடிகள்

பிறப்பு - 1651.04.21
இலங்கை வருகை - 1687
இறப்பு - 1711.01.16



தமிழ் சிங்கள கத்தோலிக்க
இலக்கியத்தின் தந்தை
கொன்சால்வேஸ் அடிகள்

பிறப்பு - 1676.06.08
இலங்கை வருகை - 1705. 8.30
இறப்பு - 1742.07.17

அவரது தியான சம்பிரதாய (ஓறத்தோரியன் சபை) சபையைச் சேர்ந்த ஜாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளாரும் அவரோடு இணைந்து பணி செய்தார். சுதேச கத்தோலிக்க இலக்கிய வளர்ச்சியில் கொன்சால்வேஸ் அடிகளாரின் பங்களிப்பு பெறுமதி வாய்ந்தது.

## மறைப்பணியாளர்களின் பணிகள்

- மறையைப் போதித்தல்.
- கல்விக்கூடங்களை ஆரம்பித்தல்.
- இலவசக் கல்வியை அளித்தல்.
- மறை தொடர்பான பாடல்கள், நாடகங்கள், செபங்கள் ஆகியவற்றை சுயமொழியில் கற்பித்தல்.
- ஆலயங்களை நிர்மாணித்தல்.
- ஆசிரிய பயிற்சிக்கான கலாசாலைகளை நிறுவுதல்.
- சிறுவர் பராமரிப்பு இல்லங்களை ஏற்படுத்துதல்.

- மருத்துவமனைகளை நிறுவுதல்.
- நோயாளர், சிறையிலிருப்பவர்களைச் சந்தித்தல்.
- அனாதைச் சிறுவர்களுக்குக் கல்வி அளித்தல்.
- மறையுரை ஆற்றுதல்.

## செயற்பாடு

1. போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கைக்கு வந்த துறவற சபைகள் நான்கைப் பெயரிடுக.
2. துறவற சபைகளால் இலங்கை பெற்றுக்கொண்ட சேவைகள் ஐந்தினைத் தருக.
3. ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்க திருச்சபை முகங்கொடுத்த இன்னல்கள் நான்கு தருக.
4. சிறுகுறிப்பு எழுதுக.
    1. நெஸ்தோரியன் சிலுவை
    2. ஜோசப்வாஸ் அடிகள்
    3. மன்னார் மறை சாட்சிகள்
    4. ஜாக்கோமே கொன்சால்வேஸ் அடிகள்

### வாழ்க்கைக்கு

போர்த்துகேயர், ஒல்லாந்தர் காலத்தில்
கத்தோலிக்க மறையை வளர்த்த மறைபணியாளர்களின்
அர்ப்பணத்தையும், பணியையும் பாராட்டுவோம்.
நமது மறையில் ஆர்வத்தை வளர்ப்போம்.
நமது மறையை ஆர்வத்துடன் பரப்புவோம்.